மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அஸ்திவாரம் போட்டாகிவிட்டது. மேற்கொண்டு கட்டிட வேலை 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 3-ம் தேதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் மதிப்பு 94.75 இலட்சம் ரூபாய்.

கேனல் சூப்பிரண்டுகளது சம்பளம்.

*323 வினா— திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை தொகுதியைச் சார்ந்த கேனல் சூப்பிரண்டுகளுக்கு அடிப்படைச் சம்பளம் தலைமை லஸ்கர்களை விடக் குறைவாக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) கேனல் சூப்பிரண்டுகளின் சம்பள ஏற்ற முறையை அரசு பரிசீலனை செய்து அரசு ஆணை எண். 209, பொதுப் பணித் துறை, நாள் 16—2—78-ல் ரூ. 140—3—155—4—175—5—210-லிருந்து ரூ. 160—5—240 ஆக நிர்ணயம் செய்துள்ளது.

மதுரையில் உயர்நீதி மன்றத்தின் பிரிவு.

*324 வினா— திரு. என். கிட்டப்பா : திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் சென்னை உயர்நீதி மன்றத்தின் கிளை ஒன்றை நிறுவும்படி மதுரை—இராமநாதபுரம் வர்த்தக சபை அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளதா?

(ஆ) ஆமெனில், அரசு மேற்கொண்ட முடிவு யாது?

THE HON. THIRU K. NARAYANASWAMYMUDALIAR : (a) Yes.

(b) Sitting up of a Bench of the High Court of Madras at Madurai involves Parliamentary Legislation. This Government have addressed the Government of India to take immediate action on this. The decision of the Government of India in this regard is awaited.

The Government of India have requested this Government to obtain and forward the views of the present Chief Justice on the proposal. The High Court has been addressed.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS